ISSN:2582-9599



# ஐயனார் வழிபாட்டு மரபு

45

**சா.மணிமேகலை &** முனைவர் ஆர்.நிர்மலாதேவி
**தமிழ்த்துறை,**
**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),ஈரோடு-638012.**

.

**ஆய்வு நோக்கம் –** நாட்டுப்புற சிறு தெய்வ வழிபாடுகளின் நோக்கும் போக்கும்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தில் காலந்தோறும் வழிபடப்பட்டு வரும் ஐயனார் வழிபாடு சங்ககாலம் முதல் இக்கால கட்டம் வரை பல சமயங்களில் பல நாடுகளில் விரவிக் கிடப்பது பற்றியும், ஐயனார் வழிபாட்டில் பெருமரபுக் கூறுகளும் சிறுமரபுக் கூறுகளும் இணைந்திருப்பது பற்றியும், சங்க்காலத்தின் சாத்தன் என்ற பெயர் ஐயனாருக்குரியது என்பதற்கான இலக்கியச் சான்றுகளையும், அக்கால வணிகப் பாதைகளில் எல்லாம் ஐயனார் வழிபாடு செய்யப்பட்டுள்ள செய்தியினையும் தமிழகக் கிராம மக்களின் காவல் தெய்வமாக என்றென்றும் ஐயனார் வழிபாடு இருப்பதை பற்றியும் சி ல தகவல்களாலும், நூல்களாலும் சான்றுகளுடன் கூறி இக்கட்டுரை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

திறவுச்சொற்கள் – ஐயனார் – பண்பாட்டுச் சின்னங்கள் – சிறு தெய்வ, பெருந் தெய்வ வழிபாடு – திருமால் – காவற்படை – கொடுவாய் -

**முன்னுரை**

பண்பாட்டு மரபு என்பது மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழும்போது தங்களுக்கென்று விழுமிய நடத்தை முறைகளை தலைமுறை தலைமுறையாகக் கடைபிடித்து, அதில் நம்பிக்கை கொண்டு வாழப் பழகிக் கொள்வதாகும்.

பழந்தமிழர்கள் அகவாழ்வு புறவாழ்வுப் பண்பாட்டோடு இறை வழிபாட்டுப் பழக்கங்களையும் முறையாகக் கடைபிடித்து வந்துள்ளனர். ஒரு நாட்டின் பண்பாட்டுச் சின்னமாகவும் நாகரிகத்தின் அறிகுறியாகவும் விளங்குவது இறைவழிபாடும் கோவில்களும் ஆகும். அத்தகைய இறைவழிபாட்டு மரபுகளில் ஒன்றான ஐயனார் வழிபாட்டு மரபில் காலந்தோறும் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்கள் பற்றித் தமிழ் இலக்கியங்கள் வாயிலாகவும், ஒரு சில கள ஆய்வின் வழியாகவும் ஆராய்ந்து கூறுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**தமிழினப் பண்பாட்டு மரபில் சமயத் தாக்கம்**

நுண்ணறிவு கொண்ட மனிதனாக ஒருவன் இருப்பினும் பண்பில்லாத மனிதனாக இருப்பின் அவனை சமுதாயம் மதிப்பதில்லை.

**“அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்**
**மக்கட் பண்பு இல்லாதவர்” [1]குறள் 997.**

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப ஒரு மனிதன் கூர்மையான அறிவுடையவனாக இருப்பினும் சிறந்த பண்பைத் தன்னகத்தே கொண்டிருந்தால் மட்டுமே அவன் முழுநிலை மனிதனவான்.

தமிழர்களின் வரலாற்றினை உற்று நோக்கினால் தமிழனப்பண்பாட்டில் சமயத்தாக்கம் அவர்களது வாழ்வோடு பின்னிப் பிணைந்திருப்பதை அறிய இயலுகிறது. திணைக் கோட்பாட்டின் தொடக்கமே வழிபாட்டிலிருந்து தொடங்குகின்றன.

தமிழர்கள் தாங்கள் வாழும் சூழ்நிலைக்கும் இடத்திற்குமேற்ப வழிபாட்டு மரபுகளையும் கடவுளையும் கொண்டிருந்தனர். அத்தகைய கடவுள்களில் ஒருவராக வழிபடப்பட்டவர் ஐயனார். ஐயனார் வழிபாட்டு மரபில் காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மாறுபட்ட தன்மையுடன் பெரும்பான்மை மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளது.

**சிறுதெய்வ பெருந்தெய்வ மரபு**

ராபர்ட் ரெட்பீல்ட்ஸ் என்ற சமூகவியல் அறிஞர் அமெரிக்க வாழ்க்கை முறையைப் பெருமரபு (Great Tradition) சிறுமரபு (Little Tradition) என்று பிரித்துக் காட்டுவது போல, தமிழகத்தில் சமய வழிபாட்டில் பெருந்தெய்வ சிறுதெய்வ வழிபாட்டு மரபு காணப்படுகிறது.

> **“பெருமரபு சான்றோரால் நினைவு கூர்ந்தும் செப்பம் செய்யப்பட்டும் வளர்க்கப்படுகிறது. சிறுமரபு அவ்வாறு நினைவு கூர்ந்தும் செப்பம் செய்யப்பட்டும் வளர்க்கப்படுவதில்லை. பெருமரபு நூல்களின் மூலம் அறிந்து கொள்ள இயலும்”[2]**

என்று தமிழர் வழிபாட்டின் பெருமரபும் சிறுமரபும் குறித்து ஆறு இராமநாதன் அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால் இரு மரபும் கொண்ட ஒரு தெய்வமாக தமிழரின் வாழ்வில் தொடர்ந்து வரும் ஒரு வழிபாடு ஐயனார் வழிபாடு

**இருமரபும் (பெருமரபு, சிறுமரபு) கொண்ட ஐயனார் வழிபாடு**

ஐயனார் என்ற பெயருக்குப் பொருள் கொண்டால் “ஐ என்றால் தலைவனானவன் என்று பொருள்”[3] தமிழகத்தில் ஐயனார் பற்றி பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று சிவபெருமானுக்கும், திருமால் மோகினி வடிவெடுத்த போது, இவ்விருவருக்கும் (சிவன் திருமால்) பிறந்த மகன் ஐயனார் என்ற கதை பெரும்பான்மைக் கிராம மக்களால் வழங்கப்பட்டு வருகிறது. இக்கருத்தினை பி.எல்.சாமி அவர்களும் “தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு” எனும் நூலில் ஐயனாரை சிவன் மகன் என்று குறிப்பிடுகிறார்.

“சிவபெருமானின் மகன்களில் குமரன், விநாயகன் ஆகியாருடன் சாத்தனும் மகனாக்கப்பட்டான். இன்று கிராமங்களில் காணப்படும் ஐயனார் வழிபாட்டில் பழங்குடி மக்களின் சாதவாகனன் வழிபாடும், பௌத்த சைனரின் சாத்தன் வழிபாடும், சைவரின் சிவபெருமான் மகனின் வழிபாடும் கலந்திருப்பதைக் காண்கிறோம்.”[4]

சிவனின் மகனாக பெருமரபு கொண்ட ஐயனார் வழிபாடானது தமிழகக் கிராமங்களில் நாட்டுப்புறத் தெய்வமாக, காவல் தெய்வமாக பெரும்பாலான ஊர்களில் சிறுதெய்வமாக சிறுமரபு மரபு கொண்டு வழிபடப்பட்டு வருகிறது.

**வரலாற்று நோக்கில் ஐயனார் வழிபாடு**

பல்வேறு சமய வழிபாடுகளோடு பின்னிப் பிணைந்து கிடக்கும் ஐயனார் வழிபாடானது தமிழ்நாட்டு வணிக மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகக் கருதப்படுகிறது.

ஐயனார் பற்றிய ஆய்வுகள் பலவும் அவரை, சாஸ்தா, சாத்தன், ஐய்யனார், ஐயப்பன் இவர்கள் அனைவரும் ஒன்றே எனக் குறிப்பிடுகின்றன. சாத்தன் என்ற கடவுளும் ஐயனாரும் உருவ அமைப்பில் ஒன்று போல உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தேவநேயப் பாவணார் அவர்களின் கருத்துப்படி,

”நாட்டின் பல இடங்களுக்கும் தத்தம் காவற்படையுடன் சென்று பொருளீட்டிய வணிகக் கூட்டங்களுக்கு சாத்து என்று பெயர். சார்த்து - சாத்து சார்தல் சேர்தல் என்பது பொருளாம்”.

.

திருப்பூர் மாவட்டம் திருப்பூரிலிருந்து தாராபுரம் சாலையில் அமைந்துள்ள ஊர் கொடுவாய். இவ்வூர் 'குடவாயில்' என்று பழங்காலத்தில் பெயர் கொண்டுள்ளது.

“இவ்வூரில் உள்ள ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் பழமையுடைய ஐயனார் சிலை தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (2015ம் ஆண்டு). இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஐயனார் சிலை பழமை வாய்ந்த நாகேசுவரர் (கொடுவாய்) கோவிலில் உள்ளது”[6]

கொடுவாய் பழங்காலத்தில், சேரநாட்டிலிருந்து சோழநாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் செல்லும் வழித்தடமாக இருந்துள்ளது.

“அக்காலத்தில் வணிகத்திற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் பாண்டிய நாடு, சோழநாடு செல்வோர் இங்கு தங்கி இவ்வழியாகச் சென்ற வாயிலாக கொடுவாய் இருந்ததினால் இதற்கு ‘குடவாயில்’ என்று அழைத்தனர். காலப்போக்கில் கொடுவாயாக மருவியது”[7] பல்லடத்திற்கும் காங்கயத்திற்கும் நடுவிலான ஒரு ஊரே கொடுவாயாகும். “கொடுவாயில் உள்ள ஐயனார் சிலை

வட்டெழுத்துக்களுடன் கூடியது“[8] மேற்கண்ட தகவல்களை உற்று நோக்கினால் ஐயனார் வழிப்போக்கிற்கும் வணிகத்திற்கும் நெருங்கிய காவல் தெய்வமாக இருந்திருக்கலாம் என்பதை அறிய முடிகிறது.

**நடுகல் வழிபாடும் ஐயனாரும்**

ஐயனார் பழங்காலத்தில் போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு எடுத்த நடுகற்கள் தாம் என்றும் கூறப்படுகிறது. போரில் வேலும் வில்லும் கொண்டு போரிட்டு மாய்ந்ததால் வேலும் வில்லும் சாத்தி வணங்கினர். ஐயன் என்றால் தலைவன், உயர்ந்தவன் வீரன் என்ற பொருளும் உண்டு. “கொங்குநாட்டில் பெரியோர்களை (தந்தையின் பாட்டன்) ஐயா என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. அவ்வகையில் ஒரு பகுதியின் சிறந்த மனிதனை அவன் உயிர்நீத்தபின் ஐயன் - ஐயனார் என்று வழிபட்டிருக்கலாம்.

**சங்ககால இலக்கியங்களில் சாத்தன்**

சங்க காலத்திலும் சாத்தன் வழிபாடு இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியங்கள் பாடிய புலவர்கள் பலரின் பெயர் சாத்தன் என்ற பெயரோடு முடிகிறது. எடுத்துக்காட்டாக சீத்தலைச்சாத்தனார், ஆமூர் சாத்தனார், பூதஞ்சாத்தனார், அந்துவன் சாத்தன், முதலியோர்களும், அரசர்களில் பாண்டியன் கீரன் சாத்தன், கருவூர் சேரமான் சாத்தனார் போன்ற மேலும் பல அரசர்களும் புலவர்களும் சாத்தன் என்ற பெயரோடு தொடர்புடையவர்களாக உள்ளனர்.

மதுரை நக்கீரனார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வேண்மானுக்குச் சொந்தமான பிடவூர் எனும் ஊரில், சாத்தன் என்ற கடவுள் இருந்த்தாகவும் அந்தக் கடவுளின் கிளை நாங்கள் என்று நக்கீரர் குறிப்பிடுவது போல் பாடல் பொருள் அமைந்துள்ளது.

**சீர் சான்ற விழுச்சிறப்பின்**
**சிறுகண் யானைப் பெறலருந்தித்தன்**
**செல்லா நல்லிசை உறந்தைக் குணாது,**
**நெடுங்கை வேண்மான் அருங்காடிப்பிடவூர் [9] (புறம்-395)**

என்ற புறநானூற்றுப் பாடலின் வழி அறவழியையுடையவன் சாத்தன் என்பதும் அவ்வழி வந்த தலைமுறையினர் நாங்கள் என்றும் நக்கீரர் குறிப்பிடுகிறார்.

“பிடவூரில் இருந்த அறச்சாத்தன் என்ற தெய்வம் புகழுடன் பிற்காலத்தில் அதே ஊரில் இருந்ததென்பது மிகவும் வியப்புக்குரியது. பிடவூர் என்ற ஊர் இன்று திருப்பாட்டூர் என்று வழங்குகிறது”[10]மேற்காணும் தகவல்கள் கொண்டு சாத்தன் என்பது அறமும் வீரமும் கொண்ட

உயர்ந்தோர்க்கு வழங்கும் பெயராகச் சாத்தன் என்ற பெயர் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

**காப்பியங்களில் சாத்தன்**

சாத்தன் வழிபாடு பற்றிய செய்திகள் காப்பியங்களிலும் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் பாசண்டச்சாத்தன் என்ற தெய்வம் பற்றிக் கூறப்படுகிறது.

**“வச்சிரக்கோட்டம் புறம்பணையான் வாழ் கோட்டம்**
**நிக்கந்தக் கோட்ட நிலக் கோட்டம் புக்கெங்கும்**
**தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்**
**பாசண்டச் சாத்தற்கு பாடு கிடந்தாளுக்கு”** [11]

“பாசண்டச் சாத்தன் என்பதை விளக்கும்போது சாத்தன் என்கிற ஐயன் கோவில் என்று அரும்பத உரையாசிரியர் உரை கூறியுள்ளார்”[12] மேலும் கனாத்திரமுரைத்த காதையில் புறம்பானையான் வாழ்க்கோட்டம் என்ற கோவில் இருந்த்தாகக் கூறப்படுகிறது. இக்கோவிலை சாதவாகனன் கோவில் என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். ஊருக்குப் புறம்பாக அமைந்த ஐயனார் கோவிலை இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

“குழந்தை இழந்த மாலதி அழுது ஏங்கின போது சாத்தனே குழந்தையாக வந்து அவளுடைய துயரைத் தீர்த்தான் இந்தக் குழந்தையே பின்னர் மறையோனாய் வளர்ந்து தேவந்தியை மணந்து பின்னர் அவளை விட்டு தெய்வ யாக்கை பெற்றது. தன்னுடைய மூவா இளநலத்தைக் காட்டி மறைந்தது. மூவா இளநலத்தைக் காட்டியது பாசாண்டச் சாத்தனாகிய தெய்வமேயாகும்”[13] இக்கருத்துக்களின்படி கிராமப்புறங்களில் இன்றைய காலகட்டங்களிலும் ஐயனார் கோவில்களில் குழந்தை உருவத்தினை மண்ணால் செய்து வழிபட்டால் குழந்தை இல்லாத தம்பதிக்கு குழந்தை கிடைக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

**கேரளாவில் ஐயனார் வழிபாடு**

தமிழகத்தில் ஐயனராக வழிபடப்படும் தெய்வம் கேரளாவில் ஐயப்பனாக வழிபடப்படுகிறது என்ற கருத்தும் நிலவுகிறது. தமிழகத்தில் காவல் தெய்வமாக கருதப்பட்ட ஐயனார் கேரளத்திலும் காவல் தெய்வமாக கருதப்படுகிறார்.

“குடகு நாட்டில் வாழும் கொடவர்களுக்கு ஐயப்பனே வேட்டை தெய்வமாக இருப்பதைக் காணலாம். ஐயப்பன் இரவு நேரங்களில் கொடிய வேட்டை நாய்களுடன் காடுகளில் உலாவுவதாக நம்புகின்றனர். வேட்டை துவக்குமுன் ஐயப்பனுக்குப் பூசை படைக்கின்றனர். ஐயப்பன் முதலில் வேட்டைத் தெய்வமாக இருந்ததை அறிந்து கொள்ளலாம்”[15] பழங்குடி மக்களின் வேட்டைத் தெய்வமாகவும், பழங்குடி மக்களின் தாய்த்தெய்வத்திற்கு மகனாகவும் சாத்தன் வணங்கப்பட்டுள்ளதை பல்வேறு சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. வீரக்கடவுளாக கொடிய விலங்குகளிடமிருந்தும் தீய

சக்திகளிடமிருந்தும் மனிதர்களைக் காக்கும் தெய்வமாக சாத்தன் வழிபாடு கருதப்படுகிறது.

**இலங்கையில் சாத்தன் வழிபாடு**

தமிழக வழிபாட்டின் கூறுகள் பல இலங்கை வழிபாட்டோடு இணைந்து வரும் தன்மையுடையன. அவ்வகையில் இலங்கையிலும் ஐயனார் வழிபாடு இருந்து வந்தமையைப் பற்றி சில சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

“இலங்கைத் தீவு அனுராதபுரத்தில் ஒரு குளத்தின் ஓரமாகப் பெரியதொரு சிலை காணப்படுகிறது. இதை ஈசுரமுனி என்றழைக்கின்றனர். இச்சிலை கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த்து என்று ஒரு சிலரும், 6-7-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று ஒரு சிலரும் கூறுவர். இந்தச் சிலையைப் பற்றி ஆராய்ந்த சில அறிஞர்கள் இது சாஸ்தாவின் சிற்பம் என்றும் கூறியுள்ளனர்.”[16] சாஸ்தாவை தமிழ்நாட்டில் முனீஸ்வரன் என்றும் அழைப்பதுண்டு. கரையோரங்களில் ஐயனாரை வைத்து வழிபடுவது போல இலங்கை அனுராதபுரத்திலும் குளத்தின் ஓரமாக வைத்து வழிபட்டிருக்கலாம்.

**ஐயனாரின் வாகனம்**

ஐயனார் கோவில்களில் அவரது வாகனமாக குதிரை அமைந்துள்ளது. தமிழகக் கிராமக் கோவில்கள் பெரும்பான்மை ஐயனார் உட்கார்ந்த நிலையிலோ, இடது காலைச் சிறிது தூக்கி ஊன்றி அந்தக் கால்முட்டியின் மேல் இடது கையை வைத்திருப்பது போன்றோ உருவங்கள் உள்ளன. கையில் குதிரை வாகனச் சாட்டையும் காணப்படுகிறது.

**முடிவு**

வணிகர்களும், வேட்டைத் தொழிலுக்கு போவோர்களும், மற்றையோரும் தங்கள் பாதுகாவலுக்கு வைத்து வழிபட்ட தெய்வம் ஐயனார் என்று கூறலாம் அல்லது தங்களுடன் வாழ்ந்த மிகச்சிறந்த வீரமும் நல்குணங்களும் பொருந்தி ஒருவரை ஐயனாராகக் கருதி வழிபட்டிருக்கலாம். ஏனெனில் ஐயனார் என்பதின் பொருள் தலைவன் என்பதால் தங்கள் குடும்பங்களைக் காக்கும் தலைவனாக தங்கள் மூதாதையர்களில் ஒருவரை வழிபட்டிருக்கலாம். மக்களைக் காப்பதிலும், நன்னெறிப்படி வாழச் செய்வதிலும் தெய்வங்கள் துணை புரியும் என்பதை இக்கட்டுரை ஆய்வின் வழி அறிய இயலுகிறது. ஐயனார் பற்றிய மேலும் பல ஆய்வுகள் மேற்கொண்டால் தமிழக வணிக வழகளையும், வரலாற்றுச் செய்திகளையும் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும்.

**அடிக்குறிப்புகள்**

1. திருவள்ளுவர், திருக்குறள்.
2. இராமநாசன். ஆறு, நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், பக்-7.
3. தகவலாளர், கதிரேசன் 48- தமிழ் பண்டிதர்.

4. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு.
5. இணையம், 'உண்மையத் தேடி' கட்டுரை ஆகஸ்ட் 23, https//ramanas wordpress.com
6. தகவலாளர், ஆறுமுகம்.எம்- 70, கோயில் பூசாரி நிழலி கிராமம் (கொடுவாய்).
7. தகவலாளர், சண்முகம்- 100, கோயில் பூசாரி கொடுவாய் (நிழலி).
8. தகவலாளர், சிவாச்சலம்-75, நாகேசுவரர் கோயில் பூசாரி கொடுவாய் (நிழலி).
9. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, பக்.109.
10. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, பக்.91.
11. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் கனாத்திறமுறைத்த காதை வரிகள் 12-15.
12. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, பக்.93.
13. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, பக்.94.

**துணைநூற்பட்டியல்**

1. இரா. கனகசுப்புரத்தினம் — திருக்குறள் உணர்புரை
அறிவுநிதி பதிப்பகம்
ஏ-59, ஐந்தாம் தெரு,
பெரியார் நகர்,
சென்னை - 600 082.
தொலைபேசி - 4453722

2. பி.எல்.சாமி — தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600 098.
தொலைபேசி - 26258410

**தகவலாளர் பட்டியல்**

1. கதிரேசன் எம்.ஏ., முனீசுவரர் கோவில் பூசாரி, நிழலி கிராமம், செட்டிபாளையம், கொடுவாய்.
2. சண்முகம், முனீசுவரர் கோவில் பூசாரி, நிழலி கிராமம், செட்டிபாளையம், கொடுவாய்.
3. சிவாச்சலம், பி.ஏ, கொடுவாய் நாகேசுவரர் கோவில் பூசாரி, கொடுவாய்.

**இணையம்**

1. https://ramanas.wordpress.com
அய்யனார் யார் உண்மையைத் தேடி, 2011 ஆகஸ்ட் 29.
2. https://tamilhindu.com
ஐயன்-ஐயனார்-ஐயப்பன் அருளாட்சி பற்றிய நோக்கு.